# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009
# அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 9**

## தனிநடிப்புப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1) 10 வயதுக்குட்பட்டோர், 11 - 17 வயதுக்குட்பட்டோர், என்ற இரண்டு விசேட பிரிவுகளில் நடைபெறும். போட்டியாளர் தமக்குக் கொடுக்கப்படும் கருப் பொருளை ஒட்டிய செய்தியை வெளிக்காட்டும் வகையில் நடித்துக் காட்ட வேண்டும். இந்த நடிப்பு 3 நிமிடங்களுக்குக் குறையாமலும், 5 நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

2) **போட்டிக்கான கருப்பொருள்: *"என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும்"*** என்பதாகும். இந்த கருப்பொருளுடன் கூடிய தலைப்பு ஒன்றில் (சுருக்கமான செய்தி) நீங்கள் நடித்துக் காட்ட வேண்டும்.

3) போட்டியாளரின் நடிப்புத் திறன் பின்வரும் அம்சங்களில் கவனிக்கப்படும். **கருப்பொருளோடு ஒன்றிய செய்தி-விடயம்-வெளிப்பாடு (30%), பாத்திரத்தோடு ஒன்றிய நடிப்பு (50%), மேடை உத்திகள், ஒப்பனை (20%)** என வகையாகக் கணிக்கப்படும்.

4) **கருப்பொருளோடு ஒன்றிய செய்தி-விடயம்-வெளிப்பாடு (30%),**
   - போட்டியாளர் எடுத்துக் கொண்ட தலைப்புச் செய்தியானது (கருத்து), ***என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும்*** என்ற எமது கருப்பொருளோடு ஒட்டியதானதாகவும், சமூக விழுமியங்களுக்கு அமைவதாகவும் இருத்தல் வேண்டும்.
   - நடிப்பானது தழுவல் இல்லாத சுய தயாரிப்பாகவும் வெளிப்பாடாகவும் இருத்தல் வேண்டும்.
   - நெறியாள்கையும் கவனித்திற் கொள்ளப்படும்.

5) **பாத்திரத்தோடு ஒன்றிய நடிப்பு (50%)**
   - எடுத்துக் கொண்ட கதாபாத்திரத்தை அல்லது கருத்தைச் சரியாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்தும் முகமாக நடித்தல்.
   - மேடை நடிப்பின் அடிப்படை அம்சங்களுக்கு அமைய நடித்தல் (மேடைக் கூச்சத்தைத் தவிர்த்தல் வேண்டும்: நடித்துக் காட்டுதல்: அங்க அசைவுகளும் அவற்றின் மேல் நடிப்பவரின் கட்டுப்பாடும், தெளிவான விளக்கமான நடிப்பு சொற்பிரயோகம், இயல்பான நடிப்பு.
   - வசனங்களுக்குத் தகுந்த உணர்ச்சி:(மிகையான உணர்ச்சிகள், முரணான சைகைகள், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.)
   - தொய்வில்லாத நடிப்புத் தொடர்ச்சியும் ஒழுங்கமைக்கபட்ட நடிப்பும்.

6) **மேடை உத்திகள், ஒப்பனை (20%),**
   - நடிப்பு உத்திகள் - உ + ம்: குறியீடுகள், பல பாத்திரம் ஏற்றல், மேடைப் பயன்பாடு
   - ஒப்பனை காதாபாத்திரத்திற்கும், எடுத்துக் கொண்ட கருப் பொருளுக்கும் இயைபாக இருக்கவேண்டும். ஒவ்வாத, மிகையான ஒப்பனையைத் தவிர்க்க வேண்டும்.
   - ஒலி, ஒளி, மேடை அமைப்புக்குப் புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.
   - மேடையில் அன்று கிடைக்கக்கூடிய வசதிகளைத் தவிர எந்த மேடை வசதிகளும் செய்து கொடுக்கப்பட மாட்டாது. மேடை விபரங்களைப் பற்றி அறிய விரும்பின் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.
   - மேடை அமைப்புக்கு மேலதிக நேரம் வழங்கப்பட மாட்டாது. மேடை அமைப்பு ஏனைய போட்டியாளர்களுக்கு இடையூறாக இருக்காது பார்த்துக் கொள்ளவேண்டும்.

7) **போட்டிகளுக்கான பொது விதிமுறைகளை மற்ற போட்டி விபரங்களிற் பார்க்கவும்.**

**தமிழ் ஊக்குவிப்புப் குழு, அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்**